www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk



# ஒருங்கூட்டல் முத்திரை வரிக்கான கூற்றினை நிரப்புவதற்கான வழிகாட்டி

- கூற்றுனை நிரப்புவதற்கு முன்னர் இந்த வழிகாட்டியை வாசிக்க வலியுறுத்தப்படுகின்றீர்கள் .
- கூற்றினை **இ -சேவைகளினூடாக** அல்லது நேரடியாக சமர்ப்பிக்கலாம்.

## இ – சேவையினூடாக சமர்ப்பித்தல் -

## www.Ird.gov.lk→e-services →Access to e-services.

மேலதிக தகவல்களுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்கள வலைதள நுளைவாயிலின் இ - சேவையில் **வழிகாட்டி** இணைக்கப்பட்டுள்ளது.

| இ- சேவையை பயன்படுத்தி நேரத்தையும் பணத்தையும் |
|---|

- நீங்கள் ஏலவே இ -சேவையை பயன்படுத்துபவராயின், முத்திரை வரி நடவடிக்கைகளுக்கு முத்திரை தீர்வையை செயல்படுத்த வேண்டும். இல்லை எனில் நீங்கள் இ – சேவைகளை பயன்படுத்துவதற்கு PIN இலக்கத்தைக் கோரலாம். https://eservices.ird.gov.lk/Registration/PINRequest/ShowPINRequestDetail)

## நேரடியாக சமர்ப்பித்தல் -

குறிப்பிட்ட காலப் பகுதிக்கு ஒவ்வொரு கூற்றுக்கும் பார்கோட் (barcode) ஆனது தனித்துவமானது. ஆகவே, படிவத்தை நிரப்புவதற்காக உள்நாட்டு இறைவரித்த திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட **<u>மூலக் கூற்றினைப்</u>** பயன்படுத்தல் வேண்டும். மூலப் பிரதியை தவறவிட்டிருப்பின், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வியாபார ஆலோசனை அலகினை தொடர்பு கொள்ளவும்.
முதலாம் பக்கத்திலுள்ள வரிசெலுத்துநரின் குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் காலப் பகுதி தொடர்பில் கவனம் செலுத்த வலியுறுத்தப்படுகின்றீர்கள்

- வ.அ.இ.(TIN)
- பெயர் மற்றும் முகவரி
- காலம்
- செலுத்த வேண்டிய திகதி
- முறைமையினால் உருவாக்கப்பட்ட பார்கோட் இலக்கம்.

❖ கூற்றானது நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது;

1. பகுதி 1 – முத்திரை தீர்வைக்கு பொறுப்புடைய சாதனங்கள்.
2. பகுதி 2 – முத்திரை தீர்வை விலக்களிக்கப்பட்ட சாதனங்கள்.
3. பகுதி 3 -கொடுப்பனவு தொடர்பிலான தகவல்கள்
4. பகுதி 4 - வெளிப்படுத்தல்

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

## பகுதி 1 – முத்திரை தீர்வைக்கு பொறுப்புடைய சாதனங்கள்

முத்தரை தீர்வைக்கு பொறுப்புடைய சாதனங்கள் மற்றும் பிரயோகிக்கத்தக்க வரி வீதங்கள் தொடர்பில் 1465/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையை பார்க்கவும்.

குறிப்பிட்ட சாதனங்களின் வகைகள் **நிரல் 101 இல்** நிரல்படுத்தப்பட்டுள்ளன.

நீங்கள் திரட்டிய அனைத்து பொறுப்புடைய சாதனங்களின் விபரங்களை பின்வருமாறு பதியவும்.

i. **நிரல் 102** – குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு சாதனுத்துக்குமான இலக்கத்தை பதியவும்
ii. **நிரல் 103** – அந்தந்த சாதனத்திற்கு கீழாக ஒவ்வொரு பொறுப்புடைய சாதனத்தினதும் திரட்டப்பட்ட பெறுமதியை பதியவும்.
iii. **நிரல் 104** –ஒவ்வொரு வகையான சாதனத்துக்கும் திரட்டப்பட்ட ஒருங்கூட்டப்பட்ட முத்திரைத் தீர்வையின் கூட்டுத் தொகையைப் பதியவும்.
iv. **கூடு 100** – திரட்டப்பட்ட முத்திரைத் தீர்வையின் மொத்தத் தொகையை பதியவும் (நிரல் 104 இன் கூட்டுத் தொகை)

## பகுதி 2 – முத்திரைத் தீர்வை விலக்களிக்கப்பட்ட சாதனங்கள்

விலக்களிக்கப்பட்ட சாதனங்கள் தொடர்பில் மேலதிக தகவல்களுக்கு ஏற்புடைய திருத்தங்களுடன் 1465/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையைப் பார்க்கவும்.

குறிப்பிட்ட சாதனங்களின் வகைகள் **நிரல் 201** இன் கீழ் நிரல்படுத்தப்பட்டுள்ளது.

விலக்களிக்கப்பட்ட சாதனங்கள் ஏதும் காணப்படின் இப் பகுதியில் அதன் விபரங்களைப் பதியவும்.

i. நிரல் 202 – அந்தந்தந்த சாதனத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு விலக்களிக்கப்பட்ட சாதனத்தின் இலக்கத்தை பதியவும்.
ii. நிரல் 203 – அந்தந்த சாதனத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட ஒவ்வொரு சாதனத்தின் திரட்டப்பட்ட பெறுமதியை பதியவும்.

குறிப்பு – உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைதளத்தின் நுழைவாயிலில் ‘வரி வகை’ – முத்திரை தீர்வையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொறுப்புடைய சாதனங்கள் மற்றும் விலக்களிக்கப்பட்ட சாதனங்களுக்கு வெவ்வேறான அட்டவணைகளை பாவிக்கவும்.

## பகுதி 3 – கொடுப்பனவு தொடர்பிலான தகவல்கள்

ஒவ்வொரு காலாண்டினதும் முத்திரைத்த தீர்வைப் பொறுப்பினை செலுத்துவதற்கு அந்த காலாண்டுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அச்சிடப்பட்ட பணக் - கொடுப்பனவுச் – சிட்டையைப் பயன்படுத்தவும், அச்சிடப்பட்ட பணக் கொடுப்பனவுச் சிட்டை

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

இல்லை எனில், கொடுப்பனவுச் சிட்டையில் கொடுப்பனவுக் காலப்பகுதிக்கான குறியீட்டை சரியாகக் குறிப்பிடவும்.

உதாரணமாக.

| காலப்பகுதி | | காலப்பகுதி குறியீடு |
|---|---|---|
| 2020.09.30 முடிவடையும் காலாண்டுக்கு | - | **20090** |
| 2020.12.31 முடிவடையும் காலாண்டுக்கு | - | **20120** |

## பகுதி 4 – வெளிப்படுத்தல்

கூற்றின் இறுதியிலுள்ள வெளிப்படுத்துகையில், அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை அடங்கலாக, வெளிப்படுத்துநரின் கேட்கப்பட்ட விபரங்களை தெளிவாகப் பதியவும்.

**வெளிப்படுத்துநரின் கையொப்பம்** இல்லாத கூற்று சமர்ப்பிக்கப்படாத கூற்றாகக் கொள்ளப்படும்.

குறிப்பு – **பிழையான கூற்றினை தயாரித்த, உரிய திகதியில் கூற்றினை சமர்ப்பிக்காதிருந்த அல்லது உரிய திகதிகளில் வரிகளை செலுத்தாதிருந்த எவரேனும் நபர் மீது தண்டம் விதிக்கப்படும்.**

**உதாரணம்:-**

கம்பனி ABC லிமிடட் ஆனது 2020.09.30 முடிவடைந்த காலாண்டின் போது பின்வரும் சாதனங்களை வழங்கியது

**1. காப்புறுதிக் கொள்கைகள்**

| தொடர் இல. | திகதி | காப்பீட்டாளரின் பெயர் | சாதனத்தின் குறிப்பீட்டு எண். | கொள்கையின் இயல்பு | சாதனத்தின் மொத்த பெறுமதி ரூபா | சேகரிக்கப்பட்ட முத்திரை தீர்வை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 20.07.2020 | xxxx | G123 | கார் ஒன்றின் சாதாரண காப்பீடு | 750,000.00 | 750.00 |
| *2 | 05.08.2020 | CCC | G124 | இயந்திரம் ஒன்றின் சாதாரண காப்பீடு | 125,000.00 | - |
| 3 | 05.08.2020 | yyyy | G125 | கப' ஒன'றின் சாதாரண காப்பீடு | 135,000.00 | 135.00 |
| *4 | 09.09.2020 | ZZZZ | L1001 | திரு. ZZZ இற்கான ஆயுட் காப்பீடு | 250,000.00 | - |
| 5 | 22.09.2020 | KKKK Ltd | F2001 | KKKK லிமிடடிற்கான தீ காப்பீடு | 75,000.00 | 75.00 |
| மொத்தம் | | | | | 1,210,000.00 | 960.00 |

**2, *4 –விலக்களிக்கப்பட்ட காப்புறுதிக் கொள்கைகள்*

**2. சம்பள பெறுகைகள்**

ஜூலை மாதம்

| தொடர் இல | திகதி | ஊழியர் இலக்கம் | தொழில் வழங்குநரின் பெயர் | மொத்த சம்பளத் தொகை ரூபா. | கழிக்கப்பட்ட முத்திரை தீர்வை ரூபா |
|---|---|---|---|---|---|
| *1 | 25/07/2020 | 1001 | Aaaa | 25,000.00 | - |
| 2 | 25/07/2020 | 1002 | bbbb | 35,000.00 | 25.00 |
| *3 | 25/07/2020 | 1003 | Cccc | 15,000.00 | - |

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

ஆகஸ்ட் மாதம்

| தொடர் இல | திகதி | ஊழியர் இலக்கம் | தொழில் வழங்குநரின் பெயர் | மொத்த சம்பளத் தொகை ரூபா. | கழிக்கப்பட்ட முத்திரை தீர்வை ரூபா |
|---|---|---|---|---|---|
| *1 | 25/08/2020 | 1001 | Aaaa | 25,000.00 | - |
| 2 | 25/08/2020 | 1002 | bbbb | 35,000.00 | 25.00 |
| *3 | 25/08/2020 | 1003 | Cccc | 15,000.00 | - |

செப்தம்பர் மாதம்

| தொடர் இல | திகதி | ஊழியர் இலக்கம் | தொழில் வழங்குநரின் பெயர் | மொத்த சம்பளத் தொகை ரூபா. | கழிக்கப்பட்ட முத்திரை தீர்வை ரூபா |
|---|---|---|---|---|---|
| *1 | 25/09/2020 | 1001 | Aaaa | 25,000.00 | - |
| 2 | 25/09/2020 | 1002 | bbbb | 35,000.00 | 25.00 |
| *3 | 25/09/2020 | 1003 | Cccc | 15,000.00 | - |

**1, *3 – விலக்களிக்கப்பட்ட சம்பள பெறுகைகள்*

**திரட்டப்பட்ட முத்திரைத் தீர்வைக் கூற்றின் பகுதி 1** மற்றும் **பகுதி 2** பின்வருமாறு நிரப்பப்படுதல் **வேண்டும்.**

**பகுதி1 – முத்திரைத் தீர்வைக்கு பொறுப்புடைய சாதனங்கள்**

| 101 | 102 | 103 | 104 |
|---|---|---|---|
| குறிப்பிடப்பட்ட சாதனத்தின் வகை | சாதனங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | முத்திரை தீர்வை ரூபா |
| காப்புறுதி பூட்கை | 3 | 960,000.00 | 960.00 |
| அனுமதி பத்திரங்கள் | - | - | - |
| மதுபான அனுமதிபத்திரங்கள் | - | - | - |
| நொத்தாரிசு அனுமதிபத்திரங்கள் | - | - | - |
| ஏனைய அனுமதிபத்திரங்கள் | - | - | - |
| கடன் அட்டை பரிமாற்றம் | - | - | - |
| ஊதிய பற்றுச் சீட்டுக்கள | 3 | 105,000.00 | 75.00 |
| பெற்றவைகளும் தீர்த்தவைகளும் | - | - | - |
| முறிகளும் குத்தகைகளும் | - | - | - |
| வாக்குறுதிப் பத்திரங்கள் | - | - | - |
| குத்தகை, வாடகை மற்றும் கூலி | - | - | - |
| ஏனையவை | - | - | - |
| **மொத்த முத்திரை தீர்வை** | | | 1,035.00 |

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

- **பகுதி 2 – முத்திரை தீர்வை விலக்களிக்கப்பட்ட சாதனங்கள்**

| 201 | 202 | 203 |
|---|---|---|
| குறிப்பிடப்பட்ட சாதனத்தின் வகை | சாதனங்களின் எண்ணிக்கை | பெறுமதி<br>ரூபா |
| காப்புறுதி பூட்கை | 2 | 375,000.00 |
| அனுமதி பத்திரங்கள் | - | - |
| மதுபான அனுமதிபத்திரங்கள் | - | - |
| நொத்தாரிசு அனுமதிபத்திரங்கள் | - | - |
| ஏனைய அனுமதிபத்திரங்கள் | - | - |
| கடன் அட்டை பரிமாற்றம் | - | - |
| ஊதிய பற்றுச் சீட்டுக்கள | 6 | 120,000.00 |
| பெற்றவைகளும் தீர்த்தவைகளும் | - | - |
| முறிகளும் குத்தகைகளும் | - | - |
| வாக்குறுதிப் பத்திரங்கள் | - | - |
| குத்தகை, வாடகை மற்றும் கூலி | - | - |
| ஏனையவை | -- | - |

❖ **தொடர்புக்கான விபரங்கள்**

**மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இலக்கங்களை தொடர்பு கொள்ளலாம்**

| | |
|---|---|
| **முத்திரை தீர்வை அலகு** | **0112135179<br>0112135174<br>0112135137<br>0112135139<br>0112135101** |
| **செயலகம்** | **0112135435<br>0112135434<br>0112135412** |

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk